Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# கர்நாடக இசை வளர்ச்சியில் அப்பியாசகான உருப்படிகளின் முக்கியத்துவம்

முனைவர் ம. ராஜேஸ் பாபு
குரல் இசைத்துறை உதவி பேராசிரியர்,
கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-1

75

## முன்னுரை

ஆயகலைகள் 64 என்பர் அதிலே இயல், இசை ,நாடகம் இம்மூன்றும் மனிதனுடைய பக்தியையும், உணர்வையும் மேம்படுத்துவதற்காக கையாளப்பட்டன. அதிலும் குறிப்பாக இசை மனிதனுடைய அன்றாட வாழ்க்கையில் இணைந்து பயணிக்கின்ற ஒன்றாக இருந்து வருகிறது. அதில் தென்னிந்திய இசையான கர்நாடக இசை பல நுணுக்கங்களை கொண்டதாக சிறந்து காணப்படுகிறது. கர்நாடக இசையில் பயிற்சி இசை வடிவங்கள், அரங்க இசை வடிவங்கள் என்ற இரு பிரிவுகள் காணப்படுகின்றன. அதில் முதலாவதாக கையாளப்படுவது பயிற்சி வடிவங்கள் ஆகும். இவை கர்நாடக இசையை முறையாக கற்பதற்கு பெரிதும் உதவியாக இருக்கின்றன. அந்த வகையில் பயிற்சி இசை வடிவங்கள் கர்நாடக இசை வளர்ச்சிக்கு எவ்வாறு பங்களிக்கின்றது என்பதை இக்கட்டுரையின் வழி காணலாம்.

## கர்நாடக இசை

விஜயநகரப் பேரரசுக்கும் அவர்கள் வழியாக வந்த நாயக்கர் ஆட்சிக்கும் உட்பட்டிருந்த பகுதிகள் கர்நாடக பிரதேசம் என்று அழைக்கப்பட்டது. எனவே இந்த பகுதியில் பாடப்பட்ட இசை ஆனது கர்நாடக இசை என்று பிற்காலத்தில் பெயர் பெற்றது. தமிழகத்தில் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியதாகும். செம்மொழியில் ஏழிசை என குரல், துத்தம், கைகளை, உழை, இளி ,விளரி மற்றும் தாரம் என அழைக்கப்பட்டதையே தமிழ் மொழியில் வடமொழியில் கலப்பு ஏற்பட்டபோது இந்த ஏழு இசைகளும் சுரம் என்று அழைக்கப்பட்டது.

சங்கீத பிதா என அழைக்கப்பட்ட புரந்தரதாசர் கர்நாடக இசையின் தொடக்க பயிற்சி பாடங்களை முறைப்படுத்தினார். தியாகராஜ சுவாமிகள், முத்துசாமி தீக்ஷிதர், சியாமா சாஸ்திரிகள் என்னும் மூவரும் கர்நாடக இசையின் மும்மூர்த்திகள் என அனைவராலும் அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் இயற்றிய ஆயிரக்கணக்கான பாடல்கள் இன்று வரை கர்நாடக இசையின் உயிர்நாடியாக உள்ளன. இம்மூவருக்கும் முன்னர் ஆதிமூம்மூர்த்திகள் என முத்து தாண்டவர், அருணாச்சல கவிராயர், மாரிமுத்தா பிள்ளை என்னும் முப்பெரும் இசை அறிஞர்கள் சீர்காழியில் வாழ்ந்து கர்நாடக இசையை செப்பமுற வளர்த்தனர். இவ்வாறு பல இசைவாணர்கள் இக்கர்நாடக இசையை வளர்த்துள்ளனர்.

## கர்நாடக இசையின் அடிப்படை பயிற்சி

கர்நாடக இசையின் வரலாற்றின் தொடக்க காலத்தில் ஸ்வர குறியீடுகள் பயன்படுத்தப்படவில்லை ஆரம்ப காலத்தில் அலங்காரங்கள் வர்ணங்கள் என சிறு சிறு சுர சஞ்சாரக் கோர்வைகள் பயிற்சி வடிவங்களாக பயன்படுத்தப்பட்டுள்ளன. அவைகளை கிரந்த நூல்களில் காண முடிகிறது. சங்கீத பிதா என்று அழைக்கப்பட்ட புரந்தரதாசர் அவர்களின் காலத்திற்குப் பிறகு கர்நாடக

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

இசையில் பயிற்சி உருப்படிகள் முறையாக கையாளப்பட்டன. அவை குரலிசை, கருவி இசை என இரண்டு பிரிவுகளில் பயிற்றுவிக்கப்பட்டன. குரலிசை மற்றும் கருவி இசை இவை இரண்டிற்கும் பதினைந்தாவது மேளமாகிய மாயாமாளவகௌளை ராகம் ஆதி தாளம் என்ற முறையிலும், புல்லாங்குழல் இசைக் கருவிக்கு மட்டும் 28 வது மேளமாகிய ஹரிகாம்போஜி ராகம் ,ஆதிதாளம் என்ற முறையிலும், ராகம் மற்றும் தாளம் இவைகள் கையாளப்பட்டு வருகின்றன.

**ஸ்வரப் பயிற்சி**

கர்நாடக இசையில் பயிற்சிக்கென சரளி வரிசைகள், ஜண்டை வரிசைகள், மேல் ஸ்தாயி வரிசைகள், கீழ்ஸ்தாயி வரிசைகள், தாட்டு வரிசைகள், அலங்காரங்கள் என ஸ்வரங்கள் தாளக் கட்டுகளுக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டு ஒன்று , இரண்டு என பயிற்சியாளரின் திறனுக்கு ஏற்ற வகையில் பல காலங்களில் பயிற்சி செய்யப்படுகிறது. பொதுவாக இப்பயிற்சிகள் மூன்று காலங்களில் செய்யப்படுகின்றன. மேலும் மாயா மாளவ கௌளை மற்றும் ஹரிகாம்போஜி போன்ற மேள ராகங்களில் மட்டுமின்றி 72 மேளங்கள் மற்றும் ஷாடவம் ஔடவம் போன்ற ஜன்னிய, உபாங்க ராகங்களிலும் சுரப்பயிற்சிகள் செய்யப்படுகின்றன. இப்பயிற்சிகளை ஸ்வரங்களாக பாடுவதோடு அவற்றை அஹாரம் செய்து பாடும்போது குரல் வளம், ஸ்வர ஞானம், தாள ஞானம் போன்ற இசை நுணுக்கங்களில் தேர்ச்சி பெற முடிகிறது.

**கீதம் :**

'கீதம்' என்பது பயிற்சி இசைவடிவங்களில் சாகித்தியங்கள் கலந்த முதல் பயிற்சி இசை வடிவம் ஆகும் . கீதம் என்ற பயிற்சி இசைவடிவத்தில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற பாகுபாடு கிடையாது; ஆனால் தாளத்துக்கு ஏற்றவாறு சுமார் 10 அல்லது 12 ஆவர்த்தனங்கள் அதில் காணப்படும். கீதத்தை ஆரம்ப முதல் முடிவு வரை தொடர்ச்சியாகப் பாட வேண்டும். இதை பல காலங்களில் பயிற்சி செய்வதால் சுரங்களுக்கு ஏற்ற வகையில் சாகித்தியங்களை தெளிவுற பாடுவதற்கான திறன் ஏற்படுகிறது எனலாம். இவை சஞ்சாரி கீதம், இலக்கண கீதம் என இரண்டு வகைகளில் காணப்படுகின்றன.

**கீதங்களை இயற்றிய வாக்கேயக்காரர்கள்.**

புரந்தரதாசர், பைடாள குருமூர்த்தி, வெங்கடமகி, கோவிந்த தீட்சிதர், ராமாமாத்யர், டைகர் வரதாச்சாரியார், பெரியசாமி தூரன் போன்றோர் ஆவர்.

**ஜதீஸ்வரம்**

இது பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்கங்களை கொண்டு சுரங்கலால் மட்டுமே அமைக்கப்பட்ட சிறந்த பயிற்சி இசை உருப்படியாகும்.

தாளக்கட்டு ,ஜதி கோர்வை போன்ற சிறப்பம்சங்களை சுரங்களின் மூலமாக வெளிப்படுத்துவதால் இதனை ஜதீஸ்வரம் என்று அழைப்பர். இது பெரும்பாலும் நாட்டியத்தில் கையாளப்படுகிறது. கர்நாடக இசையின் தாள நுணுக்கங்களை சுரங்களின் மூலமாக அறிந்து கொள்ள இவ்வுருப்படியானது துணை நிற்கிறது.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**ஜதீஸ்வரங்களை இயற்றிய வாக்கேயக்காரர்கள்**

சுவாதித்திருநாள் மகாராஜா, பொன்னையா பிள்ளை, தஞ்சை நால்வர், கே. என் தண்டாயுதபாணி பிள்ளை போன்றோர் ஆவர்.

**ஸ்வரஜதி**

வர்ணங்களைக் கற்று அறிவதற்கு ஸ்வரஜதிகள் வழிகாட்டியாக உள்ளன. சுரஜதிக்கு பல்லவி, அனுபல்லவி ,சரணம் முதலிய பகுதிகள் உண்டு. பல சரணங்களை உடைய இசை வடிவங்களில் சுரஜதியும் ஒன்று சில சுரஜதிகளில் அனுபல்லவி இல்லாமல் இருக்கும். எடுத்துக்காட்டு பைரவி ராகத்தில் உள்ள காமாட்சி எனத் தொடங்கும் சுரஜதி. சுரஜதிகளில் சாகித்தியம் பக்தி, காதல், வீரம் முதலிய உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கும். சுரஜதிகள் பொதுவில் பயிற்சிக்கான இசை வகையை சேர்ந்தவை எனினும் சியாமா சாஸ்திரி இயற்றியுள்ள மூன்று சுரஜதிகளும் அரங்க இசையில் பாடப்பட்டு வருகின்றன.

**ஸ்வரஜதிகளை இயற்றிய வாக்கேயக்காரர்கள்**

சியாமா சாஸ்திரி, சோபனாத்ரி, சின்னி கிருஷ்ண தாசர், சுவாதித் திருநாள், மெரட்டூர் வெங்கடராம சாஸ்திரி, பொன்னையா பிள்ளை போன்றோர் ஆவர்.

**வர்ணம்**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து உருப்படிகளின் மொத்த அமைப்பை கொண்ட சிறந்த உருப்படி வர்ணங்கள் ஆகும். இது பல்லவி, அனுபல்லவி, முத்தாயிஸ்வரம், சரணம், சரணம் சிட்டை ஸ்வரங்கள் முதலிய அமைப்புகளை கொண்டது. தானவர்ணம், பதவர்ணம், தருவர்ணம் என மூன்று வகைகளில் வர்ணங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தானம் பாடுவதற்கு பயிற்சி அளிக்கும் வகையில் அமைக்கப்பட்ட வர்ணம் தான வர்ணம் ஆகும். இதில் அகாரம் செய்வதற்கு ஏற்றார் போல சாகித்தியங்கள் குறைவாக காணப்படும். முத்தாயிஸ்வரம், சரண சிட்டைஸ்வரங்கள் இவற்றில் சாகித்தியம் இருக்காது. பல காலங்களில் இதனை பாடிப் பயிற்சி செய்வதால் குரலில் அழுத்தமும், உச்சரிப்பில் தெளிவும், தாளக்கட்டில் பிடிப்பும் ஏற்படும்.

நாட்டியத்தில் அபிநயம் செய்வதற்கும், அடவுகள் செய்வதற்கும் ஏற்றார் போல் அமைக்கப்பட்டுள்ள வர்ணங்களே பதவர்ணங்கள் ஆகும். இது சாகித்தியங்கள் மிகுதியாக கொண்ட உருப்படியாகும். இதன் அனைத்து அங்கங்களிலும் சாகித்தியங்கள் காணப்படும். இதன் பூர்வாங்க பகுதியை மத்திம காலத்திலும் உத்தரங்கப் பகுதியை மேற்காலத்திலும் பாடுவது வழக்கம். சில அரங்கிசைகளிலும் பதவர்த்தனங்கள் இசைக்கப்படுகின்றன.

சாகித்தியம் போல் ஜதியை சேர்த்து இசைக்கப்படும் பத வர்ணங்கள் பதஜதி வர்ணம் அல்லது தருவர்ணம் என்று அழைக்கப்படுகிறது. நடன கச்சேரிகளிலும், இசை கச்சேரிகளும் இவ்வர்ணங்கள் கையாளப்பட்டு வருகின்றன.

**வர்ணங்களை இயற்றிய வாக்கேயக்காரர்கள்**

பச்சிமிரியம் ஆதியப்பய்யர், கோவிந்தசாமி அய்யர், பட்டணம் சுப்பிரமணிய ஐயர், பாபநாசம் சிவன், கே. என் தண்டாயுதபாணி பிள்ளை, முத்தையா பாகவதர் போன்றோர் ஆவர்.

**முடிவுரை**

உலக இசை முறைகளில் ஒவ்வொன்றிலும் பயிற்சி இசை வடிவங்கள் காணப்படுகின்றன. அவை சுருதி தாளம் ரசம்,உச்சரிப்பு,அழுத்தம் போன்றவற்றில் ஒன்றையோ அல்லது இரண்டையோ மேம்படுத்துவதற்காக பயிற்சி செய்யப்படுகிறது. ஆனால் இந்தியாவில் அதுவும் தென்னிந்தியாவில் கர்நாடக இசையில் மட்டுமே ஸ்ருதி, தாளம், ரசம், உச்சரிப்பு ,அழுத்தம் இவற்றை மேம்படுத்துவதற்கும், மெருகூட்டுவதற்கும் சிறந்த பயிற்சி உருப்படிகள் கையாளப்பட்டு வருகின்றன. என்ற கருத்தினை இதன் வழி அறிய முடிகிறது.

**துணை நின்ற நூல்கள்**

1. சங்கீத கல்பதுருமம் - முனைவர் எல். முத்தையா பாகவதர்,கேரளா அரசு ,முதல் பாகம்-1977.

2. இந்திய இசை கருவூலம் - முனைவர் கே. ஏ. பக்கிரி சாமி பாரதிகுசேலர் பதிப்பகம் ,சென்னை ஆகஸ்ட் -20 02

3. இசை வர்ணங்கள் ஓர் ஆய்வு - ஆய்வாளர் திரு. ம. ராஜேஸ் பாபு , கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சி-ஏப்ரல் 2010